


# திருமண நடைமுறை ஒரு கண்ணோட்டம்

## <u>சிங்கப்பூரில் திருமனத்துக்குரிய 3 கட்டங்கள்:</u>

திருமண அறிவிப்பை இந்த இனையத் தளத்தில் பதிவு செய்ய வேண்டும்
(http://www.rom.gov.sg)

↓

திருமண பதிவகத்துக்குச் சென்று பத்திரங்கள் உண்மையானவை என்பதை உறுதி செய்து, சட்டபூர்வ சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.
**(முன் அனுமதி பெற்ற பிறகே செல்ல முடியும்)**

↓

திருமண தினத்தில், முறைப்படி மணம் செய்துவைக்க அதிகாரம் பெற்றவரிடம் சென்று 2 சாட்சிகளின் முன்னிலையில் மணம்புரிந்து கொள்ளவேண்டும்.




# திருமணத்துக்குத் தேவையான அம்சங்கள்

## சிங்கப்பூரல் 15 நாள் தங்கிருக்க வேண்டும்

- திருமணம் செய்துகொள்ள விரும்பும் சிங்கப்பூரர் அல்லது நிரந்தரவாசி அல்லாதவர்களில் ஒருவர் திருமணத் தேதி அறிவிப்பை பதிவு செய்வதற்கு முன் குறைந்தபட்சம் 15 நாள் சிங்கப்பூரில் இருந்திருக்கவேண்டும்.
- அந்த 15 நாட்கள் தொடர்ச்சியானதாகவோ, அல்லது திருமன அறிவிப்பை பதிவு செய்ய வரும் தேதிக்கு முன் உடனடியானதாகவோ இருக்க வேண்டும் என்பதில்லை.

## திருமண ஜோடிகள் வயது

- திருமண ஜோடிகள் 21 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருக்க வேண்டும்.
- அவர்களில் யாரும் 18 வயதுக்குக் குறைந்தவர்களாக இருக்க கூடாது.
- அவர்களில் ஒருவர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 21 வயதுக்குக் குறைந்தவராகவும் இருந்து முன்னதாக மணமாகாமல் இருந்தால் பெறோர்கள் அல்லது சட்டபூர்வ காப்பாளர் திருமணத்துக்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும்.*(1 அக்டோபர் 2016-யிலிருந்து திருமண ஜோடிகளின் பெறோர்கள் அல்லது சட்டபூர்வ காப்பாளர் திருமணத்துக்கு சம்மதம் தெரிவித்தாலும் திருமண ஜோடிகள், சமூக மற்றும் குடும்ப மேம்பாட்டு அமைச்சு (MSF) அங்கிகாறம் பெற்றுள்ள அமைப்பிலிருந்து திருமண ஏற்பாடு பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.)*
- இருவரும் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 21 வயதுக்குக் குறைந்தவராகவும் இருந்து பெற்றோர்கள் அல்லது சட்டபூர்வ காப்பாளர் திருமணத்துக்கு சம்மதம் தெரிவித்தாலும் அவர்கள் திருமண ஏற்பாடு பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
- அவர்களில் யாரும் 18 வயதுக்குக் குறைந்தவராக இருந்தால் அவர்கள் தனிப்பட்ட ஒரு திருமண அனுமதிக்கு மனுச் செய்ய வேண்டும். (மேல் விவரம் பெற தயவு செய்து திருமணப் பதிவகத்தை (ROM) நாடுங்கள்.

## திருமணத்துக்கு சட்டபூவ தடங்கல் இல்லை
## திருமண நிலைமை

- மணமான யாரும் உடனடியாக மற்றொருவரை மணந்து கொள்ள முடியாது.
- முன்னதாக மணமான ஒருவர் அந்தத் திருமணம் சட்டபூர்வமாக ரத்தாகிவிட்டது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- விவாகரத்தானவர்கள் மறுமணம் செய்து கொள்வதற்கு ஒரு சட்டபூர்வ விவாகரத்து பத்திரத்தை எடுக்க வேண்டும். அதில் முறையான பராமமரிப்பு உத்தரவுகள் அல்லது பராமமரிப்புத் தொகை பாக்கிகள் தங்களுக்கு உள்ளதா என்தை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.




## திருமண அறிவிப்பை பதிவு செய்யுங்கள்

திருமண ஜோடிகள் தங்கள் திருமண ஏற்பாட்டை *ROM* திருமண பதிவகத்தில் தெரிவிக்க வேண்டும், உங்கள் வீட்டிலிருந்து வசதியான நேரத்தில் *ROM* பதிவக மின்னியல் சேவைகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம். மின்னியல் சேவை வசதியை நாடும் ஜோடிகள் அர்கிலுள்ள குடிமக்கள் இணைப்பு நிலயங்களை *(CCCs)* அணுகலாம், அல்லது *ROM* பதிவக மின்னியல் சேவைக் கூடங்களுக்குச் செல்லலாம்.

## அறிவிப்பு காலத் தவணை

- அறிவிப்பு காலத் தவணை *21* நாள் ஆகும்.
  உதாரணமாக, இருவர் தங்கள் செப்டம்பர் *23* திருமணத்துக்கான அறிவிப்பை *21* தினங்களுக்கு முன் செப்டம்பர் *1*-ல் பதிவு செய்து விட வேண்டும்.
- அந்த அறிவிப்பு *3* மாதங்களுக்கு செலுபடியாகும்.
- உதாரணமாக, இருவர் தங்கள் திருமண ஏற்பாட்டை *1* செப்டம்பரில் பதிவு செய்தால், திருமணச் சடங்குக்கான கடைசித் தேதி அல்லது பதிவு முடிவடையும் தேதி *1* டிசம்பர் ஆகும்.

## தேவையான பத்திரங்கள்

- மணமகன், மணமகள் மற்றும் *21* வயதுக்கு மேற்பட்ட *2* சாட்சிகளின் அடையாள அட்டைகள் (NRIC) (சிங்கப்பூரர்/நிரந்தரவாசிக்கு)அல்லது பயண அடையாள அட்டை (பாஸ்போர்ட்டுகள்) (வெளிநாட்டினருக்கு)
- சடங்கு முறையில் மணம் செய்து வைப்பவரின் சம்மதப் பத்திரம்.(*ROM* பதிவகத்துக்கு வெளியே நடக்கும் சடங்குக்கு)
- இணையத்தில் பதிவு செய்யும் அறிவிப்புக்குரிய கடன்பற்று அட்டை; அல்லது *ROM e*-மின்னியல் சேவைக் கூடத்தில் பதவி செய்வதற்கு *NETs/ Cash Card* (ரொக்க அட்டை)
- தேவையிருந்தால், காலமான கணவன் அல்லது மனைவியின் மரணச் சான்றிதழ் அல்லது விவாக ரத்தானவர்களின் சான்றிதழ்கள் (தனிமை உத்தரவு சான்றிதழ்/நீதிமன்றம் அளித்த இடைக்கால இருதிதுதீர்ப்பின் சான்றிதழ் போன்றவை)




## செலுத்த வேண்டிய தொகைகள்

| | செலுத்த வேண்டிய தொகைகள் |
|---|---|
| சிங்கப்பூர் குடிமக்கள்/ நிரந்தரவாசிகள் | $42 |
| வெளிநாட்டினர்கள் | $380 |

## மேல் விவரங்களுக்கு

இது பொது விவகாரங்கள் தொடர்பான ஒரு வழிகாட்டி என்பதை அன்புகூர்ந்து கவனத்தில் கொள்ளுங்கள். சிங்கப்பூரில் சமூகத் திருமணப் பதிவு முறை பற்றிய தகவல்களை இணையத் தளத்தில் பெறலாம். உங்களுக்கு மேலும் விவரங்கள் தேவைப்பட்டால் தயவு செய்து *6338 7808* அசரத் தொலைபேசி எண்ணில் எங்களுடன் தொர்பு கொள்ளுங்கள்.